When morning gilds the skies

Genevan Psalter, 1551

O Seigneur
667.667.D



பாமாலை 487B பொன் போலும் கீழ்வானும்

1 பொன் போலும் கீழ்வானும்
தோன்றும் காலை நேரம்
புகழ்வோம் கிறிஸ்துவை
உழைக்கும் போதிலும்
ஜெபிக்கும் போதிலும்
புகழ்வோம் கிறிஸ்துவை

2 கோயில் மணி ஒலி
ஆ இன்பமே தொனி
புகழ்வோம் கிறிஸ்துவை
கேளுங்கள் சங்கீதம்
காதுக்கு இங்கிதம்
புகழ்வோம் கிறிஸ்துவை

3 அன்பரின் பாட்டுக்கு
ஓயாது என் நாவு
புகழ்வோம் கிறிஸ்துவை
ஆ இன்ப கீதங்கள்
என் நேசர் பாடல்கள்
புகழ்வோம் கிறிஸ்துவை

4 துக்க சாகரத்தில்
அமிழ்ந்து போகையில்
புகழ்வோம் கிறிஸ்துவை
வாழ்வு வளம் பெறும்
ஆனந்தம் பொங்கிடும்
புகழ்வோம் கிறிஸ்துவை

5 ராக்காலம் நீங்கிடும்
பூவில் ஒளி வரும்
புகழ்வோம் கிறிஸ்துவை
ஓடிடும் அலறி
அந்தகார சக்தி
புகழ்வோம் கிறிஸ்துவை

6 ஆயுள் முழுதும்
ஆனந்தம் நிரம்பும்
புகழ்வோம் கிறிஸ்துவை
நித்திய கீதமே
எந்நாளுடன் கேட்குமே
புகழ்வோம் கிறிஸ்துவை